விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 04 வியாழக்கிழமை (18.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 30

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## தென்னிலங்கை நிலைமையைப் பொறுத்து புலிகளின் தாக்குதல்கள் ஆரம்பமாகலாம்

### கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகள் மிகப் பெரும் தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனர். தென்னிலங்கையின் நிலைமையைப் பொறுத்து அவர்களின் தாக்குதல்கள் ஆரம்பமாகலாம் என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

தென்னிலங்கையில் பெரும் சம்பவங்கள் நடைபெறும்போது கிளிநொச்சி பதற்றமாகக் காணப்படுகின்றது. எதிர்வரும் வாரங்களில் பெரும் சமர்கள் மூளக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இது தென்னிலங்கையில் ஏற்படும் முன்னேற்றகரமான சூழ்நிலைகளைப் பொறுத்து அமையுமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தகவல் தருகையில்; (04 ஆம் பக்கம் பார்க்க)

## மாலுசந்தியில் துப்பாக்கிச்சூடு

(துன்னாலை)

இராணுவ வாகனத் தொடரணி மீது மாலுசந்தியில் துப்பாக்கித் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. நேற்று மாலை 5.30 மணியளவில் இத் தாக்குதல் இடம்பெற்றதாக கூறப்பட்டது.

இதனையடுத்து அப் பகுதியில் சில நிமிட நேரம் பதற்றம் நிலவியது: இத் தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. (ச–101)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நால்வர் அரசுடன் இணைய ஆர்வம்



## அமைச்சர் ஹெகலியவின் கூற்றுக்கு தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் அரசாங்கத்துடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எனினும் இக் கூற்றானது தமிழ்மக்களை திட்டமிட்டுக் குழப்புவதற்கென புனையப்பட்ட ஒரு பொய்ப்பிரசாரம் என தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்கள் நேற்று சரண்

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நேற்று இரு இளைஞர்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் 3 பேர் கொண்ட ஒரு குடும்பம் உட்பட 5 பேர் சரணடைந்துள்ளனர். வயோதிபர்களான ஒரு தாயும் தந்தையும் தமது 15 வயதுடைய மகளுடன் நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்தனர்.

நேற்று முன்தினம் சரணடைந்த குடும்பத் தலைவரை யாழ்.பொலிஸாரின் ஊடாக நீதிமன்ற பாதுகாப்பில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை அவரது மனைவிக்கும் மகளுக்கும் பெண்கள் என்ற காரணத்தினால் உரிய வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு யாழ்.மனித உரிமை ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ச)

# மட்டக்களப்பில் 33 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பலுதாவலைப் பகுதியில் 33 பேர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மைக்சி புரொன் தெரிவித்துள்ளார்.

தமது அடையாளங்களை நிரூபிக்க தவறியவர்களே கைதுசெய்யப்பட்டதாக அவர் கூறினார்.

விசாரணையின் போது சந்தேகத் திற்கிடமானவர்களைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்படுவர் என அவர் தெரிவித்தார். (ச)

# அரசுக்கு எதிரான போராட்டம் நாடளாவிய ரீதியில் வலுப்பெறும்

## தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் தீர்மானம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அரசுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் தீர்மானித்துள்ளது. நேற்றுக் கூடி ஆராய்ந்த பின்னரே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை கொழும்பில் இடம் பெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, குணதாஸ அமரசேகர,வெற்கமுவே நாளகதேரர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் 12 மாணவர் இயங்கங்க ளும் 26 தொழில் சங்கப் பிரதிநிதிகளும் பங்குபற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசு விலகவேண்டும். அனுசரணை நடவடிக்கையில் இருந்து நோர்வேயை விலக்க வேண்டும் போன்ற பல கோரிக்கைகள் போராட்டத் தின் போது முன்வைக்கப்படவுள்ளதாக இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச)

# வெருகல் பகுதியில் விமானத் தாக்குதல்

மட்டக்களப்பு வெருகல் பகுதியில் அடையாளம் காணப்பட்ட விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் இடம் பெற்ற தாக்குதலில் விடுதலைப்புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அந் நிலையம் தெரிவித்தது.

விடுதலைப்புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து தாக்குதல்கள் மேற்கொள்வதால் இத்தகைய வான் தாக்குதல்களை மேற்கொள்வதாக அவ் ஊடக மையம் தெரிவித்துள்ளது. (ச)

# வெல்லாவெளியில் படையினரின் முன்னேற்ற முயற்சி முறியடிப்பு

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளிப்பகுதியில் இராணுவத்தினரின் முன்னேற்றம் முறியடிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இம் முறியடிப்பில் துணை இராணுவக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வெல்லாவெளி ,காக்காச்சிவெட்டை, மாலையர்கட்டு 39 ஆம் கிராமப் பகுதியூடாக துணை இராணுவக்குழு (04 ஆம் பக்கம் பார்க்க)

# பொது இடங்களை பாதுகாப்பு வலயமாக்க அரசாங்கம்–புலிகளிடம் ஐ.நா.கோரிக்கை

(கொழும்பு)

மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள், கோவில்கள், வைத்தியசாலைகள் அனைத்துலக விதிகளுக்கமைய பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்துமாறு விடுதலைப்புலிகளையும் அரசாங்கத்தையும் ஐ.நா.பொதுச் செயலர் பாங்கி மூன் கோரியுள்ளார்.

எதிர்வரும் மாதம் இலங்கையில் சிறுவர்களின் அவலம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நிலையில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு நிவாரணப் பணியாளர்கள் சுதந்திரமாகச் சென்று (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பொருள்களை பெற்று விநியோகிக்க தனியார் கடைகளுக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள அத்தியாவசியப் பொருள் விநியோகத்துக்கு அனுமதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் இன்றுமுதல் பொருள்களைப் பெற்று கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கலாம் என யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.ரி.கணநாதன் அறிவித்துள்ளார்.

அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருள்களே இன்றுமுதல் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அடுத்த வாரம் தொடக்கம் மாலையிலும் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர்கூறினார். (ச-9)

## சக மாணவனை விடுவிக்கக் கோரி
## வேலாயுதம் வித்தியாலய மாணவர்கள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்

(துன்னாலை)

தமது சக மாணவனை விடுவிக்குமாறு கோரி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவர்கள் நேற்று முதல் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புலோலி கடவில் எனும் இடத்தைச் சேர்ந்த பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய உயர்தர மாணவன் பரஞ்சோதி தனஞ்சயன் (வயது-18) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போயுள்ளார்.

பிரஸ்தாப மாணவன் மந்திகையிலிருந்து துன்னாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது காணாமல் போயுள்ளதாக அவரது பெற்றோர் மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில் தமது சக மாணவனை விடுவிக்குமாறு குறிப்பிட்ட பாடசாலை மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (எ-101)

## அடிப்படைக் கட்டுமான பயிற்சி நெறி ஆரம்பம்

முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி திணைக்களத்தின் அனுசரணையுடன் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தினால் நடாத்தப்படவுள்ள தொழில்நுட்ப சான்றிதழுக்கான அடிப்படைக் கட்டுமானப் பயிற்சி எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்குப் பதிவினை மேற்கொண்ட சகல பயிற்சியாளர்களும் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

## பாதுகாப்பு ஒப்பந்தத்தில் உடன்பாடு ஏற்படுவதை இலங்கை எதிர்பார்க்கிறது
## இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் சி.ஆர்.ஜயசிங்க

(புதுடில்லி)

கைச்சாத்திடாமல் கிடப்பில் போடப்பட்டுள்ள இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கக் கூடியது.இவ் ஒப்பந்தத்தில் தற்போது கைச்சாத்திட முடியாது என இந்தியா கூறியுள்ள போதும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் உடன்பாடு ஏற்படுவதை தாம் எதிர்பார்த்துள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சி.ஆர்.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகைக்குப் பேட்டியளித்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் ஜயசிங்க மேலும் தெரிவித்துள்ளதாவது;

மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்திய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதில் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. எனினும் இவ்விடயத்தில் புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவில் எவ்வித விரிசலும் ஏற்படவில்லை.

ஆனால் இருதரப்புக்களுக்குமே பல ஏமாற்றங்கள் உள்ளன. விடுதலைப்புலிகளுடன் படையினர் மோதலில் ஈடுபட்டுள்ள போதிலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலேயே தீர்வு காண வேண்டுமென்பதில் ஜனாதிபதியும் அரசாங்கமும் தெளிவாகவுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு நாட்டில் உள்ள சகல தரப்பினரதும் அபிலாஷைகளை உள்ளடக்கிய பரந்துபட்ட வகையில் காணப்பட வேண்டும்.

ஆனால் இவற்றைத் திடீரென ஒரே நாளில் செய்ய முடியாது. இலங்கையில் நீண்ட காலமாக அமைதி நிலவியதோடு மக்களிடையே புரிந்துணர்வும் காணப்பட்டது.

இடைப்பட்ட காலத்திலேயே இப்பிரச்சினை தோன்றியது. இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் தமிழகத்தின் பல்வேறு கட்சிகளிடமிருந்து பாரிய அழுத்தத்திற்குள்ளாகி உள்ளது என்றார். (ச)

## குழந்தைகளுக்கான பால்மா பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மருந்தகத்தில் குழந்தைகளுக்கான பால் மா மற்றும் பிஸ்கெட் வகைகளைப்பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்துள்ளார்.

லக்ரோஜன் 1+, 3+, அங்கர் 1+,+3, நெக்ஸ்பிறே 1+, செர்லக் றஸ்க், கோல்டன் கௌவ் றஸ்க் ஆகியவற்றினைப் பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் கூறினார். (ச-3)

## தொழில்நுட்ப கல்லூரியில் செயன்முறைப் பரீட்சை

தொழில் நுட்பக் கல்லூரியில் விசேட பரீட்சை 2005 மற்றும் இறுதிப் பரீட்சை 2006 ற்குத் தோற்றும் தொழில்நுட்ப பீடத்தைச் சார்ந்த பரீட்சார்த்திகளுக்கான செயன் முறைப் பரீட்சை செய்முறைப் பரீட்சை நாளை ஆரம்பமாகின்றது.

நாளை தன்னியக்க இயந்திரவியல், மரவேலை பொறியியல் பாடத்திற்கும் 20 ஆம் திகதி மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் மெக்கானிசம் பாடத்திற்கும் 22 ஆம் திகதி பொருத்து பொறியியல் மற்றும் டிரக்டர் இயந்திரவியல் செய்முறைப் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தின் உதவியுடன் இலவச மதிய உணவும் யாழ்.மாநகர ஆணையாளரின் உதவியுடன் குடிநீர் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் என்.யோகராஜன் அறிவித்துள்ளார். (ச)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி நாளை வரை நடைபெறவுள்ளது. (ச)


## 14-வது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

உயர்திரு. E.S.பேரம்பலம்



காரைநகர் வாரிவளவு தனில் தோன்றி
வளமுடன் வாழ்கவென
யாழ்.நகரில் சங்கமித்து
நெற்றியில் நிறைந்த நீறுடன்
நித்தமும் புன்சிரிப்புப் பெற்றனை
ஏழுவரைப் பெருமைக்கு ஓர் ஈடேயில்லை
E.S.P.என்னும் மூன்றெழுத்தினை
முந்தானை போர்த்துக் காத்த வாரிவளவு கணபதியை
தொழுது நின்று முத்தான பணிகள்– நாம்
செய்திட வழிசெய்து நின்றீர்களே!
பக்தியுடன் பாசமூட்டி
பார்போற்ற தொழில் செய்திடவைத்த எம் ஐயாவே!
பாரினில் நாம் நிமிர வழிகாட்டிய
கலங்கரை விளக்கே!
14 ஆண்டுகள் சென்றாலும் நீங்கள் கடந்து வந்த பாதையை
என்றும் மறவோம் ஐயாவே!

மணிஓசை,
383, கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
–குடும்பத்தினர்.

(C-592)

குற்றமற்ற – ஒன்றுமறியாத – ஒரு சிறுவனின் தகுதியை நிராகரித்துத் தண்டிப்பது எவ்வளவு வெட்கக் கேடான காரியம்?

–சாக்ரட்டீஸ்

வலம்புரி

## 5-ம் தரப் புலமைப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வது வரவேற்பிற்குரியது

ஐந்தாம் தரத்தில் புலமைப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையத் தவறிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றை மீளாய்வு செய்வதெனப் பரீட்சைத் திணைக்களம் முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இதுவரை காலமும் ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தமது பரீட்சை முடிபுகளை மீளாய்வு செய்ய முடியாத நிலையில், பாடசாலையில் உச்சப் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் கல்வித் திணைக்களம் நடத்திய புலமைப் பரீட்சையில் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர்.இது மிகவும் துரதிஷ்டவசமான நிகழ்வாகும்.

ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் சிறுவர்களின் உளம் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்வது அனைவரதும் கடமையாகும்.

எனினும் உள மருத்துவர்களினதும் உளவியலாளர்களினதும் கருத்துப்படி, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்காக மாணவர்கள் மீது கடும் சுமை சுமத்தப்படுகின்றது.

சில பிரபல்யமான பாடசாலைகளில் அனுமதியைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அவர்களின் வயது, உடல் நிலை என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது சதா கற்றல் சுமையைச் செலுத்துகின்றனர்.

இதனால் அந்தப் பிஞ்சுள்ளங்களின் உளம் பாதிப்படைவதுடன் எதிர்காலத்தில் அவர்கள் மிக மோசமான உள நெருக்கீட்டிற்கு ஆளாகும் பரிதாபமும் ஏற்படவிருக்கின்றது என்பது உள மருத்துவவியலாளர்களின் கருத்து.

நிலைமை இவ்வாறாக இருக்கும் போது புலமைப் பரீட்சையில் தோற்றி அதிக புள்ளிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாணவர்களுக்கு எதிர்பார்ப்பிற்கு அப்பால் குறைந்த புள்ளிகள் கிடைக்குமாயின், அதனால் அந்த மாணவர்கள் பெரும் பாதிப்படைவது தவிர்க்க முடியாததாகும்.

எனவே ஒரு மாணவன் புலமைப் பரீட்சையில் தான் சரியாக விடை அளித்திருப்பதாகக் கருதும் பட்சத்தில் அந்த மாணவன் தனக்குக் கிடைத்த பெறுபேற்றில் திருப்தியடையாத போது தனது பரீட்சை விடைத் தாள்களை மீளாய்வு செய்யுமாறு கேட்கும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும்.

இது கடந்த காலங்களில் இல்லாது போனாலும் இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது காலம் கருதிய செயலாகும்.

இவ்வாறு ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்யும் அதேநேரம் குறித்த பரீட்சை ஒழுங்காக - ஊழல்கள் இன்றி நடத்தப்படுவது மிகமிக அவசியமாகும்.

பிரபல்யமான சில பாடசாலை ஆசிரியர்கள் புலமைப் பரீட்சை வினாத்தாள்களை ஏதோ ஒரு வகையில் பரீட்சைக்கு முன்னதாகவே பெற்றுக் கொள்வதாகவும், அவர்கள் தமது பாடசாலையின் புகழைக் காப்பாற்றுவதற்காகத் தெரிந்தெடுத்த மாணவர்களுக்கு மட்டும் அதனைக் கற்பிப்பதாகவும் பெற்றோர்கள் குறைப்பட்டுக் கொள்வது புறந்தள்ளக் கூடியதல்ல.

எனவே ஐந்தாம் தரப் புலமைப்பரீட்சை மட்டுமல்ல, க.பொ.த.(சா/த) மற்றும் க.பொ.த (உ/த) போன்ற பரீட்சைகளின் வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளிப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

# களவு தொடர்பாக உடனடியாக முறையிட தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் திருட்டுக்கள் குறித்து உடனடியாக முறையிடுமாறு இராணுவம் அறிவித்துள்ளது. இதற்கென தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பிரதேச ரீதியாக முறையிடுவதற்கென தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்தில் இவ்வாறு மக்களின் உடைமைகளைக் கொள்ளையிடுவது மக்களிடையே இராணுவத்தைப் பற்றிய தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் ஆகும் என இராணுவம் தெரிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் வருமாறு,

அச்செழு 222 3040, 222 5360, ஊரெழு, கோண்டாவில், திருநெல்வேலி 222 9978, 060 221 3115, அச்சுவேலி, கோப்பாய் 226 3450, யாழ்.நகரம் 222 8003, 222 7190, கொழும்புத்துறை, பாசையூர் 060 221 3051, 060 221 3242, நல்லூர், கந்தர்மடம் 222 2036, 222 5495, சின்னக்கடை , நாவாந்துறை 222 3708, உடுவில் 222 2038, 060 221 2204, சுன்னாகம், கொக்குவில், இணுவில் 222 8112, மானிப்பாய், சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை 222 9809, 222 9810, இருபாலை, கல்வியங்காடு 060 221 2956, அரியாலை 222 0964, 222 9802, 077 7305073, 222 7407, குடத்தனை, கட்டாய் 226 3151; 060 221 2217, 226 3413, நுணாவில் 222 2088, 222 3136, கோவிலாக்கண்டி , தனங்கிளப்பு 060 221 3114,

சாவகச்சேரி 060 221 2348, 060 221 3632, மீசாலை 226 3160, கொடிகாமம் 060 221 3106, அல்லாய், வெல்லம்பாக்கடை, கச்சாய் 060 221 3189, வரணி 060 221 2464, பருத்தித்துறை 226 3672, 226 3225, பல்லைப்பாய், புலோலி , மந்திகை 011 274 8686, தொண்டமானாறு, திக்கம், அல்வாய், வியாபாரிமூலை 060 221 2852, நெல்லியடி 226 4618, கற்கோவளம் 060 221 2823, விடத்தல்பளை, மிருசுவில் 060 222 3502, 060 221 3258, விடத்தல்பளை 060 221 3099, மிருசுவில் 060 221 2828(ச)

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டுள்ளன!



## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இயங்கும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப்புலிகளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நேர்முகமாகவோ மறைமுகமாகவோ உதவிகளை வழங்கி வருகின்றன என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரும் தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளுக்கு இரகசியமாக உதவும் சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் அரசாங்கம் முயன்ற வேளையில், அரசுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் பல்வேறு ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்பட்டன. பொது மக்களுக்கு உதவும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அரசு அநீதி இழைப்பதாகக் குரல் எழுப்பப்பட்டது.

ஆனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது அரசு சுமத்திய குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. கிழக்கில் விடுதலைப்புலிகளின் முக்கிய முகாம்களைக் கைப்பற்றிய படையினர் அங்கிருந்து மீட்ட வாகனங்கள்,மின் உற்பத்தி இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் இதற்கு தகுந்த ஆதாரங்களாகும் என அவர் தெரிவித்துள்ளார். (ச)

# தமிழ் இளைஞர்கள் பூசா முகாமுக்கு அனுப்பப்படுவதைத் தடுக்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு அமைச்சர் சந்திரசேகரன் கடிதம்

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களைப் பூசா தடுப்பு முகாமுக்கு அனுப்பும் நடைமுறையினை தடுத்து நிறுத்துமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொழும்புப் பகுதிகளில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் பூசா தடுப்பு முகாமுக்கு அனுப்பப்படுகின்றார்கள். சமீபத்திய அமைச்சரவைக் கூட்டத்தின் போது அநாவசிய கைதுகளையும் கைதுகளில் துஷ்பிரயோகங்களையும் தாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களில் கூட சில திருத்தங்களைக் கொண்டு வரவுள்ளதாகவும் தெரிவித்தீர்கள்.

ஆனால் இவ்வாறான கைது தொடர்பாக அந்தந்தப் பொலிஸ் நிலையங்களில் தொடர்பு கொள்ளும்போது உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின்படியே இவ்வாறு இளைஞர்களை பூசா முகாமிற்கு அனுப்புவதாகத் தெரிவிக்கின்றனர்.

தேசிய அடையாள அட்டை இல்லாத அல்லது சிறுசிறு காரணங்களுக்காக கைதுசெய்யப்படும் இவ்வாறான இளைஞர்களும் உடனடியாகவே தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் பூசா முகாமிற்கு அனுப்பப்படுவது மிகவும் வேதனையானது. (ச)

# கரு ஜெயசூர்யவுக்கு பிரதித் தலைவர் பதவியை ரணில் வழங்க வேண்டும்

## அரசாங்கம் கோரிக்கை

கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான கரு ஜெயசூர்யாவுக்கு பிரதித் தலைவர் பதவியை ரணில் விக்கிரமசிங்க வழங்கினால் அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் உள்வாங்காது என தெரிவித்துள்ளது.

கரு ஜெயசூர்யவுக்கு உதவும் பொருட்டே ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் உள்வாங்க எண்ணியது என மகிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள ஆர்வம் இருக்கவில்லை. ஆனால் அரசாங்கத்தை பலப்படுத்தும் நோக்குடன்தான் கரு ஜெயசூர்யவுக்கும் அவரது குழுவிற்கும் அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

அரசாங்கத்திற்கு கரு ஜெயசூர்ய ஆதரவு வழங்குவது தொடர்பாக அவருக்கு அரசாங்கத்தினால் எழுதப்பட்ட இரகசிக் கடிதத்தை தெரிந்து கொண்ட ரணில் அதில் உள்ள திட்டங்களின் அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தார்.

இதில் பாதிக்கப்பட்டது கரு ஜெயசூர்யவே. எனவேதான் மகிந்த அவருக்கு உதவ முற்பட்டுள்ளார். எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜெயசூர்யவுக்கு கட்சியின் பிரதித் தலைவர் பதவியை வழங்கினால் இவை அனைத்தும் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கரு ஜெசூர்யவுக்கு மீண்டும் பிரதித் தலைவர் பதவியை வழங்குவதே கட்சித் தாவலைத் தடுக்க ஒரே வழியென ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.தயாரட்ண தெரிவித்துள்ளார்.(ச)

# பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள் ரயர் விநியோகம்

தனியார் மூலம் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள சைக்கிள் ரயர் மற்றும் ரியூப் என்பனவற்றின் விநியோகம் முதலில் பாடசாலை மாணவர்களுக்கே வழங்கப்படும் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

தற்போது இறக்கப்பட்டு வரும் சைக்கிள் உதிரிப்பாகங்கள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பாட நூல்கள், அப்பியாசக் கொப்பிகள், சீருடை மற்றும் பாடசாலை உபகரணங்கள் இன்று கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்நடவடிக்கையே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (ச-5)

# வவுனியாவில் நேற்று முன்தினமிரவு ஆறு பொதுமக்கள் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவில் இரு வேறு சம்பவங்களில் அரச சார்பற்ற நிறுவன ஓட்டுநர் பெண் உள்ளிட்ட ஆறு பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இருவர் கடத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரிலிருந்து மேற்குப் பகுதியில் 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள குருமன்காட்டில் ஒரே வீட்டில் நேற்று முன்தினமிரவு 4 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இப் படுகொலை சம்பவமானது வவுனியா பொலிஸ் சோதனைச்சாவடி அமைந்துள்ள இடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் உள்ளது.

முச்சக்கர வாகனத்தில் அரிசி ஆலை வீதியில் நேற்றுமுன்தினமிரவு சென்று கொண்டிருந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் ஆட்டோவுடன் எரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இரவு 8 மணியளவில் நடந்த இச் சம்பவத்தில் மெடிசினிஸ் சான்ஸ் புரொன்டைர்ஸ் எனும் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஓட்டுநரான றொகான் இராஜதுரை (வயது 44) ,அன்ரன் ரூபசீலன் (வயது 26) அந்தோனிப்பிள்ளை பொன்மணி (வயது 57),யோகநாதன் ஜெயந்தன் (வயது 28) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டவர்கள் என தெரிய வந்துள்ளது.

இச் சம்பவத்தில் ஜஸ்மின் சிவகுமார் (வயது 25) என்ற பெண் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை அரிசி ஆலைப்பகுதியில் இரவு 9 மணியளவில் நடந்த சம்பவத்தில் பெருமாள் சந்திரசேகரன் (வயது 25) , தராதரன் ரமேஸ் (வயது 30) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். (ச-5,9)

# விடுதலைப்புலிகளின் ஏழு சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பு

## இராணுவம் தெரிவிப்பு

ஈச்சிலம்பற்று ,உப்பாறு பிரதேசங்களில் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதல் நடவடிக்கையின் போது உயிரிழந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் ஏழு பேரின் சடலங்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு நிலைமைகளை விளக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தேசிய பாதுகாப்புக்கான ஊடகமையத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஈச்சிலம்பற்று மற்றும் உப்பாறு பிரதேசங்களில் படையினர் மீது புலிகள் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களை முறியடிப்பதற்காக படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் சுமார் 30 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட ஏழு புலிகளின் சடலங்கள் வாழைச்சேனை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவையே நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏனைய சடலங்கள் புலிகளால் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிப்பிரதேசங்களில் சிதறிக்கிடப்பதால் அவற்றை மீட்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு நேற்றுக் கூடியது

## இனப்பிரச்சினைத்தீர்வு குறித்து ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு நேற்றுக் கூடியது. இக் கூட்டத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணல், அமைச்சரவை மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் மத்திய குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக கூறப்பட்டது.

நேற்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நாளை நடைபெறும் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## வெல்லாவெளியில்...

வினர் சகிதம் முன்னேற்ற முயற்சியினை படையினர் மேற்கொண்டனர்.

முன்னேற்ற முயற்சிக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலில் துணை இராணுவக்குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொல்லப்பட்டவரின் சடலம் உட்பட ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன என விடுதலைப்புலிகள் செய்தி வெளியிட்டுள்ளனர். (ச-5)

# யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிரான மனு விசாரிப்பது குறித்து நீதிமன்றம் ஆராய்வு

போர்நிறுத்த உடன்படிக்கையை செயலிழக்கச் செய்யும் வகையில் ஆணை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரிப்பது குறித்து மார்ச் மாதம் அறிவிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் மூன்று மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இம் மனுக்களின் பிரதிவாதிகளாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சரவையினர், தற்போதுள்ள அமைச்சரவைக்குழுவினர், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியல் அமைப்பின் பிரகாரம் விடுதலைப்புலிகளிடம் போர் நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்னாள் பிரதமருக்கு அதிகாரம் இல்லை என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிறைவேற்று ஜனாதிபதியின் அனுமதியின்றி போர் நிறுத்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் இழைத்திருப்பதாகவும் அம் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## தென்னிலங்கை நிலைமையப்...

விடுதலைப்புலிகளின் போராயத்த நிலை தொடர்பாக எமக்கு மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை. எமது குழுவினரால் மேற்கூறப்பட்ட தகவல்களை மட்டும்தான் சேகரிக்க முடிந்தது.

இந்த பலப்படுத்தல் நடவடிக்கை தென்னிலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டது. படையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்தால் ஆட்கடத்தல்கள் , படுகொலைகள் உட்பட மற்றைய வன்முறைகளும் அதிகரிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் பாரிய தாக்குதலுக்கான ஆயத்த வேலைகளில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள்ளதாக எமது புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. மேலதிக போராளிகளும் அங்கு குவிக்கப்படுகின்றார்கள் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதே சமயம் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகிய கலந்துரையாடல் பட்டறையில் கலந்து கொள்வதற்காக பெருந்தொகையான கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் கொழும்பில் உள்ளனர். எனினும் ஜனவரி 2 ஆம் வாரத்தில் இருந்து அவர்கள் யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்குச் செல்கின்றனர்.ஆனால், எப்போது நிரந்தரமாக அங்கு பணியாற்றச் செல்வார்கள் என்பது தெரியாது என கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

## பொது இடங்களை பாதுகாப்பு...

பணியாற்றவும் நிவாரணப் பணிகள் முன்னெடுப்பதற்கும் எவ்வாறான இடையூறும் விதிக்க வேண்டாம் என அவர் கோரியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இலங்கை தொடர்பான அலன் றொக்கின் அறிக்கை சமர்ப்பிக்கப்படாததற்கு தொழில்நுட்ப கோளாறே காரணம் என்றும் அதற்கு எந்த அழுத்தங்களும் காரணமல்ல என்று ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும் பெப்ரவரி 9 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு என றொக் தனது இறுதிக்கட்ட அறிக்கையை தயார் செய்து வருவதாக ஐ.நாவின் பேச்சாளர் ஓலா கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் சிறப்பு ஆலோசகரும் சிறுவர் மற்றும் ஆயுத மோதல்களுக்கான கண்காணிப்பு அதிகாரியுமான அலன் றொக் 10 நாள் பயணமாக கடந்த வருடம் நவம்பர் மாதம் இலங்கை வந்தபோது அவரால் அறியப்பட்ட விடயங்கள் தொடர்பான சுருக்கமான அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

அந்த அறிக்கையில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவான கருணா குழுவினர் தமது படையில் சிறுவர்களை சேர்ப்பதற்கு அரசபடைகள் உதவி வருவதாகவும் அதற்கான ஆதாரங்கள் உண்டு எனவும் அவர் தெரிவித்தார். ஆனால் றொக்கின் அறிக்கையை அரசு நிராகரித்ததுடன் றொக் அதற்குரிய ஆதாரங்களை சமர்ப்பிக்க தவறிவிட்டார் எனவும் தெரிவித்திருந்தது. (ச)

# மரண அறிவித்தல்

## முருகேசு கதிரவேல் (இளைப்பாறிய ஆசிரியர்)

மேல்கரவை கலட்டியை பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு கதிரவேல் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் 17.01.2007 அன்று இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் அமரர்களான முருகேசு, தங்கச்சி ஆகியோரின் தவப்புதல்வனும் செல்லமுத்துவின் அன்புக்கணவரும், முருகவேள் (வேள்), மைதிலி,அபிராமி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரவதனா (ஆசிரியை சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்),ரவிப்பிரகாஷ் (R.V எலக்ரிக்கல்ஸ், நெல்லியடி) சிறிதரன் (ஆனைக்கோட்டை ,கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஷ்ணுகா,விதுர்ஷனன், விதுர்ஷிகா, மதுசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 18.01.2007 இன்று அவரது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியை வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் அறிவித்துக்கொள்கின்றோம்.

'திருச்செந்தூர்'
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

தகவல்;
க.முருகவேள் (மகன்)

(C-596)

## தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள்...

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் அரசாங்கத்தில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசில் இணைய ஆர்வம் கொண்டுள்ள 18 ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் நடைபெறுகின்றது. அவர்கள் ஜனாதிபதிக்கு உதவுதற்கு முன்வந்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரசும் அரசில் இணையும் தனது விருப்பத்தை வெளிப்படையாக தெரிவித்துள்ளது. இவைதான் தற்போது எம்மிடம் உள்ள தகவல்கள். இதன் முடிபுகள் அடுத்து வரும் சில வாரங்களில் தெரியவரும்.

இந்த அரசியல் கட்சிகள் அரசுக்கு உதவுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தடையாக இருக்கப்போவதில்லை என்றார் அவர். பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளலாம் என வெளியாகியிருக்கும் செய்திகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் திட்டவட்டமாக மறுத்திருக்கின்றார்.

இவ்வாறான தகவல்கள் எதனையும் தான் அறியவில்லை எனத் தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன் இது தொடர்பாக வெளியாகிருக்கும் செய்தி பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவினால் அவிழ்ந்து விடப்பட்டுள்ள மற்றொரு கட்டுக்கதையே தவிர வேறொன்றுமல்ல எனவும் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் நான்கு உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணையலாம் என அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்திருப்பது தொடர்பாக பி.பி.ஸியின் சிங்கள சேவை உட்பட பல இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளதையடுத்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அது தொடர்பான தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் அரசாங்கத்துடன் இணையவுள்ளார்கள் எனவும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுப் பரவலாகப் பேசப்பட்டது. இந்த பின்னணியில் சுரேஸ் பிரேமச்சந்திரனுடன் தொடர்பு கொண்டபோது அவர் அதனைத் திட்டவட்டமாக மறுத்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைபின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவான கருணா குழுவால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் உடனடியாக பதவி விலக வேண்டும் என கருணா குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரைச் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளார்கள். அதனைவிட வேறு எதுவும் இடம்பெறவில்லை எனவும் தெரிவித்த சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் இப்போது வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவின் கூற்று உள்ளதாக அவர் தெரிவித்தார். அன்று தொடக்கம் இன்றுவரை தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் அரசுடன் இணைந்து செயற்பட்டது கிடையாது. அவர்கள் எந்தக் காலத்திலும் பேரம்போனதும் கிடையாது என அவர் கூறினார். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.